A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 09 / 2022**

திரு. K. ஆறுமுகம்,
9-170, பிள்ளையார் கோவில் தெரு,
மேலபாவூர், தென்காசி – 627806.

………மேல்முறையீட்டாளர்
(திரு. K. ஆறுமுகம்)

எதிர்

உதவி செயற்பொறியாளர் /விநியோகம்/சுரண்டை,
O/o. உதவி செயற்பொறியாளர் /விநியோகம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சுரண்டை – 627 859.

...... எதிர்மனுதாரர்
(திரு. R. ராஜசேகரன், உதவி செயற்பொறியாளர் /விநியோகம்/சுரண்டை)

**மனு பெறப்பட்ட நாள்: 05-01-2022**

**கேட்புரை நாள்: 09-03-2022**

**ஆணை நாள்: 20-05-2022**

10.01.2022 அன்று பெறப்பட்ட திரு. K. ஆறுமுகம், 9-170, பிள்ளையார் கோவில் தெரு, மேலபாவூர், தென்காசி – 627806 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 09/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 17.03.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளரின் தாயார் பெயரில் உள்ள மேலபாவூரில் அமைந்துள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 மேலபாவூரில் அமைந்துள்ள தனது தாயார் திருமதி மாடத்தி பெயரில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலம் விண்ணப்பித்து விண்ணப்ப கட்டணமும் செலுத்தியுள்ளதாக மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 எதிர்மனுதாரர் கேட்டுக் கொண்டதற்கிணங்க மின் இணைப்பு வழங்க மின் பாதை அமைப்பதற்கான மின் கம்பம் நடும் இடத்தை மேல்முறையீட்டாளர் காண்பித்ததாகவும், ஆனால் மின்கம்பம் நடும் வேலைகளை துவக்கியபோது சிலர் ஆட்சேபனை தெரிவித்ததால் மின் இணைப்பு வழங்கவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 05.08.2021 அன்று அணுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் 08.09.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 மன்றத்தின் தீர்வு:**

திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 08.09.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**மன்றத்தின் தீர்வு**:*

இருதரப்புவாதங்களையும் மன்றம் தீர ஆராய்ந்ததில் மனுதாரர் விஸ்தரிப்பு பணிக்கான ஆட்சேபணைகளை நிவர்த்தி செய்து அல்லது ஆட்சேபணையற்ற

மாற்றுப்பாதை காட்டி மீண்டும் விண்ணப்பம் பதிவு செய்யும்பட்சத்தில் மதிப்பீடு செய்து மனுதாருக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மன்றம் தீர்வு செய்கிறது.

<u>முடிவுரை</u>:

மனுதாரர் விஸ்தரிப்பு பணிக்கான ஆட்சேபணைகளை நிவர்த்தி செய்து அல்லது மாற்றுப்பாதை காட்டி மீண்டும் விண்ணப்பம் பதிவு செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மன்றம் தீர்வு செய்து மனுவானது முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது."

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 17.03.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. K. ஆறுமுகம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு. R. ராஜசேகரன், உதவி செயற்பொறியாளர் /விநியோகம்/சுரண்டை, திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:**

5.1 மேல்முறையீட்டாளர் தனது வீட்டிற்கு மின்னிணைப்பு வேண்டி உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தும் அதற்கான அனைத்து வகையான கட்டணங்கள் செலுத்தியும் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக கீழமை நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் மனுதாரர் தரப்பில் புகார் அளிக்கப்பட்டது. இதனை எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கவில்லை. ஆனால் அவ்வாறு ரத்து செய்யப்பட்டதற்கு எதிர்மனுதாரர் மின்வாரியம் தரப்பில் அளிக்கப்பட்ட காரணங்கள் மட்டும் ஏற்புடையதாக இல்லை எனவும், மேலும் அவ்வாறு ஏற்புடையதாக இல்லாத காரணங்களை அடிப்படையாக கொண்டு அளிக்கப்பட்ட கீழமை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் அளித்த 08.09.2021 தேதியிட்ட தீர்ப்பும் ஏற்புடையது அல்ல என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மின்கம்பம் மற்றும் மின்பாதை அமைக்கும் இடமானது தங்களுக்கு பாத்தியப்பட்டது என திரு.கண்ணையா மற்றும் திருமதி. மயிலம்மாள் ஆகியோர் 09.06.2021 கடிதம் மூலமாகவும் மற்றும் தங்களது வழக்கறிஞர் மூலமாகவும் மனு அளித்துள்ளது குறித்து திருமதி. மாடத்தி அவர்களுக்கு தொலைபேசி மூலமும் 09.06.2021 மற்றும் 21.06.2021 நாளிட்ட கடிதம் வாயிலாகவும் தெரிவிக்கப்பட்டது என எதிர்மனுதாரர் தரப்பில் பதிலுரையில் சொல்லப்பட்டுள்ளதாக மேற்படி தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். உண்மைநிலை என்ன என்பதை கண்டறிய எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காமல் ஒரு நபர் செய்யும் ஆட்சேபனை மட்டுமே வைத்து மனுதாரரின் மனு ரத்து செய்தது சட்டப்படி ஏற்கமுடியாத செயல். எதிர்மனுதாரர் தான் செய்யவேண்டிய கடமையை சரியாக செய்யாமல் கடமைதவறி நடந்து கொண்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 ஆட்சேபணை மனு அளித்துள்ளதாக தொலைபேசி மூலமும் கடிதம் மூலமும் மனுதாரருக்கு தகவல் அளிப்பதோடு மட்டும் எதிர்மனுதாரரின் பணி முடிவடைவதில்லை எனவும், ஆட்சேபணை மனுவை பெற்றுக்கொள்ள தகுதி உடைய அலுவலர் அதுகுறித்து உண்மை நிலையை கண்டறிய விசாரணை நடத்தவும் தகுதி உடையவரே. அப்படி இருக்க ஆட்சேபணை மனு மீது எவ்வித விசாரணையும் செய்யாமல் மனுதாரரின் விண்ணப்பத்தினை அலட்சிய போக்குடன் எதிர்மனுதாரர் ரத்து

செய்தது சட்டப்படி நியாயமற்றது. மேலும் இந்த நியாயமற்ற தனது செயலை அப்படியே தனது பதிலுரையில் எதிர்மனுதாரர் கீழமை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தெரிவித்தும் எதிர்மனுதாரர் அளித்த பதிலுரையை மட்டுமே முன்னிலைப்படுத்தி கீழமை நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் ஒருதலைப்பட்சமாக அளித்த மேற்படி தீர்ப்பு முறையானது அல்ல, அது தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் ஆட்சேபனை மனு வாங்கி வைத்துக்கொண்டாலே அதில் சொல்லப்பட்டுள்ளது உண்மை ஆகிவிடாது எனவும், அதனை விசாரித்தால்தான் ஆட்சேபனை மனுவில் சொல்லப்பட்டுள்ளது எந்த அளவிற்கு உண்மை உள்ளது அல்லது மனுதாரருக்கு தேவையற்ற முறையில் இடர்பாடு கொடுக்கவே இவ்வாறு கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை எதிர்மனுதாரர் கண்டறிந்திருக்க முடியும் எனவும், ஆனால் எதிர்மனுதாரர் அவ்வாறு செய்யாமல் மனுதாரரின் விண்ணப்பத்திற்கு எதிராக அளிக்கப்பட்ட ஆட்சேபனை மனுவை பெற்றுக்கொண்டு அதில் எவ்வித விசாரணையையும் மேற்கொள்ளாமல் மனுதாரருக்கு மட்டும் தகவல் தெரிவித்துவிட்டு மனுதாரரின் விண்ணப்பத்தினை ரத்து செய்தது பொறுப்புள்ள அரசு பணியாற்றும் ஒரு அலுவலரின் பொறுப்பற்ற செயல் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மின்கம்பம் மற்றும் மின்பாதை அமைக்கும் இடமானது தங்களுக்கு பாத்தியப்பட்டது என ஆட்சேபணை மனு அளித்தவர்கள் தங்களின் மனுவில் கூறியிருந்தால் அவர்களை நேரில் அழைத்து அவ்வாறு அவர்கள் சொல்வதற்கு ஆதாரமாக அவர்கள் பக்கம் உள்ள ஆவணங்களை வாங்கி சரிபார்த்து அவர்கள் சொன்னது உண்மையா பொய்யா என கண்டறிந்திருக்க வேண்டும். அவ்வாறு மின்துறை அலுவலருக்கு வருவாய்த்துறை ஆவணங்களை சரிபார்க்க தெரியாத சமயத்தில் அதனை வருவாய்த்துறை அலுவலருக்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி அந்த ஆவணங்களின் உண்மைத்தன்மையை அளிக்கும்படி செய்யாமல் நேரடியாகவும் தன்னிச்சையாகவும் செயல்பட்டு மனுதாரரின் விண்ணப்பத்தினை ரத்து செய்தது நியாயமற்ற செயல்.

5.6 மின் இணைப்பு கேட்பது மனுதாரரின் உரிமை. அந்த உரிமையை கேட்க விண்ணப்பம் அளிப்பது மனுதாரரின் கடமை. அதில் யாருக்கேனும் இடையூறு

இருந்தால் அதற்கு அவர்கள் ஆட்சேபனை மனு அளிப்பது அவர்களின் உரிமை. அந்த ஆட்சேபனண மனுவில் சொல்லப்பட்டுள்ளது உண்மையெனில் மனுதாரரின் விண்ணபத்தினை ரத்து செய்வது எதிர்மனுதாரரின் கடமை. இதில் காவல்துறைக்கு என்ன வேலை? அல்லது காவல் துறையில் அளித்த புகாரை ஓர் ஆவணமாக வைத்தும் அதேபோல் "பாதை குறித்து இருதரப்பினரும் பேசி முடிவுக்கு வருமாறு காவல் துறையினர் தெரிவித்து விட்டதாக" என எதிர்மனுதாரர் தனது பதிலுரையில் தெரிவித்துள்ளார். மின் இணைப்பு பெற மின்துறையில் அளித்த விண்ணபத்திற்கு காவல் துறை ("பேசி முடிவுக்கு வருமாறு") எப்படி தலையிட்டு உத்தரவு போட்டது என்பது மனுதாரருக்கு விளங்கவில்லை எனவும், இதனை கீழமை மன்றமும் கருத்தில் கொள்ளாமல் எதிர்மனுதாரர் அளித்த பதிலுரை மற்றும் வாக்கமூலத்தின் அடிப்படையில் மட்டும் தீர்ப்பளித்தது நியாயமற்றதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மின்கம்பம் மற்றும் மின்பாதை அமைக்கும் இடமானது ஆட்சேபணை மனு அளித்த திரு. கண்ணையா என்பவருக்கும் திருமதி. மயிலம்மாள் என்பவருக்கும் மட்டும் சொந்தமான தனிநபர் சொத்து கிடையாது எனவும், அந்த இடமானது மனுதாரருக்கும் உரிமையுள்ள பொதுவில் பிரிபடாத பொதுவழி பாதை, அதில் ஆட்சேபனை மனு அளித்தவர்களுக்கு என்ன உரிமை உள்ளதோ அதே உரிமையும் மனுதாரருக்கும் உள்ளது எனவும், மேலும் அது பொதுவழி பாதையே தவிர யாருடைய தனிப்பட்ட நிலமோ அல்லது வீட்டு மனையோ கிடையாது எனவும், இதனை எதிர்மனுதாரர் முறையான விசாரணை நடத்தியிருந்தால் கண்டறிந்து இருக்கலாம் எனவும், ஆனால் அவரோ ஆட்சேபணை மனுவையும் காவல் துறை உத்தரவும் மட்டுமே வைத்து மனுதாரரின் மனுவை ரத்து செய்துவிட்தாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மனுதாரரின் உடல்நிலை மற்றும் சட்ட அறிவு இல்லாத காரணங்களால் மேற்படி தீர்ப்பு குறித்து உரிய காலத்திற்குள் மேல்முறையீடு செய்ய முடியாக நிலை ஏற்பட்டது தவிர காலதாமதப்படுத்துவதில் எந்தவொரு உள்நோக்கமும் இல்லை எனவும், இந்த மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து இந்த மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொள்ளுமாறும் அவ்வாறு ஏற்றுக்கொள்வதில் எதிர்மனுதாரருக்கு எவ்விதத்திலும் சிரமமோ அல்லது பாதிப்போ இல்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 எனவே முறையற்ற முறையில் வழங்கிய கீழமை மன்றம் அளித்த 08.09.2021 தேதியிட்ட தீர்ப்பினை மேற்சொன்ன வலுவான காரணங்களின் அடிப்படையில் ரத்து செய்து உத்திரவிடவேண்டும் எனவும், தனது விண்ணப்பத்தின்படி மின் இணைப்பு வழங்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடுமாறும் மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மேல்முறையீட்டாளர் திரு.கே.ஆறுமுகம், மேலபாவூர் அவர்களின் தாயார் திருமதி. மாடத்தி க/பெ. கடற்கரை அவர்களது பெயரில் உள்ள மேலப்பாவூர் 9–1–70 பிள்ளையார் கோவில் தெருவிலுள்ள வீட்டிற்கு திருமதி.G. மாடத்தி அவர்கள் பெயரில் புதிய மின் இணைப்பு வேண்டி 11.04.2021–இல் விண்ணப்பம் online–இல் பதிவு செய்து online–இல் விண்ணப்ப கட்டணமும் செலுத்தப்பட்டுள்ளதாகவும், பின்பு இடத்தைப் பார்வையிட்டபோது 2 மின்கம்பம் நட்டு வயர் இழுத்து மின் பாதை விரிவாக்கம் செய்யப்பட்டு புதிய மின் இணைப்பு கொடுக்க வேண்டியிருந்ததால், திரு.K. ஆறுமுகம் அவர்களிடம் மின் பாதை அமைப்பதற்குரிய மின் கம்பம் நடும் இடத்தை காட்ட கேட்டுக்கொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 அதனடிப்படையில் திரு.K. ஆறுமுகம் அவர்களது தமையனார் அவர்களால் காட்டப்பட்ட இடத்தின் வழியே மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பீட்டுக் கட்டணத்தை 23.04.2021 அன்று இணையதளத்தின் வாயிலாக மேல்முறையீட்டாளரால் செலுத்தப்பட்டுள்ளது. பணி ஆணையின்படி மின்கம்பம் நடும் வேலைகளை துவக்கியபோது திரு.K. ஆறுமுகம் காட்டிய பாதையில் மின் கம்பம் நடக்கூடாது என்றும், அந்த நடைபாதை தங்களுக்கு சொந்தமானது என்றும் திரு.கண்ணையா த/பெ. பாபநாசம் மற்றும் திருமதி.மயிலம்மாள், க/பெ செல்லத்துரை ஆகியோர் 09.06.2021 அன்று தடங்கள் மனு அளித்துள்ளனர். மேலும் அன்றைய தினமே திரு. கண்ணையா அவர்களது வழக்கறிஞர் திரு.முத்துக்குமாரசாமி மூலமும் Objection கடிதம் இளநிலை மின்பொறியாளர் விநியோகம் சுந்தரபாண்டியபுரம் அலுவலகத்தில் அளிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 திரு.பா.கண்ணையா மற்றும் திருமதி. செ.மயிலம்மாள் ஆகியோர் மின்கம்பம் நடுவதற்கு objection அறிவுப்பு அளித்துள்ளார்கள் என்று இளநிலை மின்பொறியாளர் விநியோகம் சுந்தரபாண்டியபுரம் அலுவலக கடித நாள் 09.06.2021 மூலம் தகவல்

தெரிவிக்கப்பட்டது. மேலும் 30.06.2021 அன்று மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்புகை எண் 133/21 படி தெரிவிக்கப்பட்டது. திரு.K. ஆறுமுகம் அவர்களிடம் மின் கம்பம் நடுவதற்காக காட்டிய வழிப்பாதை சம்மந்தமான பத்திர நகல் கேட்கப்பட்டு பத்திர நகல் மற்றும் நத்தம் அடங்கல் மற்றும் வரைபடம் ஆகியவை இளநிலை மின்பொறியாளர் விநியோகம் சுந்தரபாண்டியபுரம் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது. அதன்படி நத்தம் அடங்கலை ஆய்வு செய்யும்போது குறிப்பிடப்பட்டுள்ள நடைபாதையானது மேலப்பாவூர் சர்வே எண் 997/6F, திரு.பாபநாசம் மற்றும் மூன்று நபர்களுக்கு சொந்தமானது எனவும் 1990 ஆம் வருடத்தில் மார்ச் 31 ந் தேதியில் எழுதப்பட்ட பதிவுறா ஆவணத்தின் அடிப்படையில் 6¼ அடி பாதையில் 4 ல் 1 ஒரு பங்கு பிரிவின்றி உரிமையும் குறிப்பிடப்பட்டுள்ளது. திரு.கண்ணையா அவர்கள் அளித்த ஆவண எண் 2654/2021 நாள் 06/5/2021 பாவூர்சத்திரம் சார்பதிவகத்தின்படி உரிமையாளர் குறிப்பிடப்படாமல் சந்து உள்ளதும் அறிய வந்தது. மின் கம்பம் நடும்போது கைகலப்பு ஏற்படும் சூழ்நிலை இருந்ததாலும், இடம் தனிநபர்களுக்கு கூட்டாக இருந்ததாலும், சர்ச்சையை தீர்க்கும் பொருட்டு பாவூர்சத்திரம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 காவல் நிலையத்தில் இரு தரப்பினரையும் அழைத்து பேசி முடிவுக்கு வருமாறு தெரிவித்துவிட்டார்கள். அதன் பின்னரும் எந்த முடிவும் எட்டப்படவில்லை. அதன் பின்பும் 30.06.2021 அன்று திரு.K. ஆறுமுகம் அவர்கள் மின் கம்பம் நடுவதற்கான இடத்தைகாட்டாமல் தொலைபேசி மூலம் மட்டுமே பேசி வந்தார்கள். மேலும் பிரச்சனையை தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் மனுதாரரால் எடுக்கப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 இது குறித்து பலமுறை தொலைபேசி மூலம் திரு.K. ஆறுமுகம் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டதற்கு தனது விண்ணப்பத்தினை உரிய காரணங்களோடு ரத்து செய்யும்படியும் தான் ரிட் மனு போட்டு தனது உரிமையை பெற்றுக்கொள்வதாக மேல்முறையீட்டாளர் கூறியதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 அதனடிப்படையில் 02.08.2021 அன்று விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டு கடித நாள் 02.08.2021–இன் படி மேல்முறையீட்டாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு ஒப்புகை சீட்டு பெறப்பட்டுள்ளது. திருநெல்வேலி நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மேல்முறையீட்டாளர் அளித்த மனுவின் மீது இருதரப்பு வாதங்களையும் மன்றம் தீர

ஆராய்ந்து மனுதாரர் விஸ்தரிப்பு பணிக்கான ஆட்சேபனைகளை நிவர்த்தி செய்து அல்லது ஆட்சேபனையற்ற மாற்று பாதை காட்டி மீண்டும் விண்ணப்பம் பதிவு செய்யும் பட்சத்தில் மனுதாரருக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

6.7 மனுதாரரால் அளிக்கப்பட்ட ஆவணங்கள் முழுமையாக பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே மின்னிணைப்புக்காக மின்பாதை அமைவிடம் சர்ச்சை குறித்து விண்ணப்பதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும், சட்டப்படியே எதிர்மனுதாரரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 முழுமையாக விசாரிக்கப்பட்டே ஆவணங்கள் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பொறுப்பான முறையிலேயே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 09.06.2021, 30.06.2021 மற்றும் 02.08.2021 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள பாதை சம்பந்தமான ஆவணங்களில் உரிமை சந்தேகக் கூறு கண்டறியப்பட்டதால் நிவர்த்தி செய்வதற்கு மனுதாரருக்கு உரிய அறிவிப்பு வழங்கப்பட்டு கால அவகாசம் வழங்கப்பட்டும், மனுதாரரால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாததன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு விதிகளின் படியும் சட்டத்தின் படியும் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 மின்பாதை விரிவாக்கம் பணியின் போது ஏற்பட்ட ஆட்சேபனை மற்றும் தகராறு ஏற்பட்ட சூழலில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுவதை தவிர்க்கவும், வாரிய ஊழியர்கள் பாதுகாப்பு கருதியும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 பாதையின் உரிமையை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவராவர். மனுதாரர் பாதை சம்பந்தமாக மின்பாதை விரிவாக்கம் பணியில் தடங்கல் ஏற்பட்டபின் அளித்துள்ள ஆவணங்களில் உரிமை சம்பந்தமாக தெளிவான வெளிப்பாடு இல்லை என்பதாலே உரிய கால அவகாசம் வழங்கப்பட்ட பின்னரே விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 மேல்முறையீட்டாளர் விஸ்தரிப்பு பணிக்கான ஆட்சேபனைகளை நிவர்த்தி செய்து அல்லது மாற்றுப்பாதைகாட்டி மீண்டும் விண்ணப்பம் பதிவு செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற உத்தரவை உறுதி செய்து உத்தரவு வழங்குமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.13 திரு.K. ஆறுமுகம் அவர்கள் மற்றும் ஆட்சேபனை தரப்பினருக்கும் சமரசம் செய்து வைக்கும் பொருட்டு 17.02.2022 அன்று உதவி செயற்பொறியாளர்/விநியோகம்/சுரண்டை அவர்கள் அலுவலகத்தில் நடைபெற்ற சமரச கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி கடித நாள் 10/2/2022 வாயிலாக அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. அதன்படி நடைபெற்ற கூட்டத்தில் திரு.K. ஆறுமுகம் அவர்கள் மட்டும் கலந்து கொண்டார். ஆட்சேபனை தரப்பினர் கலந்து கொள்ளவில்லை. இளநிலை மின்பொறியாளர் / விநியோகம் /சுந்தரபாண்டியபுரம் அவர்கள் மின்கம்பம் நடுவதற்குரிய இடத்திற்கு சென்று ஆட்சேபனை தரப்பினரிடம் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தியதில் அவர்கள் எவ்வித சமரசத்திற்கும் ஒத்துவரவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி தனது தாயார் திருமதி.மாடத்தி பெயரில் கடந்த 11.04.2021 அன்று விண்ணப்பித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இதற்கான மின் இணைப்புக்கட்டணங்களையும் செலுத்தியுள்ளார். ஆனால் மின் இணைப்பு வழங்கப்படவேண்டிய இடத்தை பார்வையிட்டபோது, அம்மின் இணைப்பு வழங்க 2 மின்கம்பங்கள் நடப்பட்டு கூடுதல் மின்பாதை அமைத்துதான் அம்மின் இணைப்பு வழங்கவேண்டிய நிலை இருந்ததால் விண்ணப்பதாரரை அந்த விஸ்தரிப்புப்பணிக்கான மதிப்பீட்டு கட்டணத்தை செலுத்தக்கூறியதன் அடிப்படையில் ரூ.22,980 செலுத்தியுள்ளார். இந்நிலையில் மின் கம்பம் மற்றும் மின்பாதை அமைக்கும் இடமானது தங்களுக்கு சொந்தமானது என திரு.கண்ணையா மற்றும் திருமதி.மயிலம்மாள் ஆகியோர் 09.06.2021 அன்று கடிதம் மூலமாக **தங்களது** ஆட்சேபனையை தெரிவித்துள்ளனர்.

7.3 இந்த ஆட்சேபனையினை அடிப்படையாகக்கொண்டு எதிர்மனுதாரர், அதன் உண்மைத்தன்மையை ஆராயமலும் விஸ்தரிப்புப்பணிகளை மேற்கொள்ளாமலும் தனது மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தினை இரத்து செய்துவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இருதரப்பினரும் பேசி முடிவுக்குவருமாறு காவல்துறையினர் தெரிவித்ததன் அடிப்படையில் எதிர்மனுதாரர் செயல்பட்டது ஏற்றுக்கொள்ள இயலாது எனக்கூறி மேற்கோரிய மின் இணைப்பு வழங்க உத்தரவிடுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

7.4. புதிய மின் இணைப்பு வேண்டும்பொருட்டு மின் வினியோக விதிகளின் படியும் பல்வகை கட்டண விதிகளின் படியும் விண்ணப்பதாரர் செலுத்தவேண்டிய மின் இணைப்பு கட்டணங்களை செலுத்தியுள்ளதாகவே அறியப்படுகிறது. ஆயினும், விஸ்தரிப்புபணிகளை மேற்கொள்ளவேண்டிய இடத்தின்பொருட்டு ஆட்சேபனை எழுந்துள்ளது. அப்பணிகளை மேற்கொள்ள திரு.கண்ணையா என்பவரும் திருமதி. மயிலம்மாள் என்பவரும் அவ்விடமானது **தங்களுடைய** மனைவழியாக செல்லவிருப்பதாகவும் அது **தங்களுடைய** பூமி எனவும் பொதுபாதை அல்ல எனவும் **கூறியுள்ளனர்**.

7.5. மேல்முறையீட்டாளர் திரு.ஆறுமுகம் அளித்துள்ள அடங்கல் ஆவணத்தினை கொண்டு பார்க்கும்போது அது 4 உரிமையாளர்களை உள்ளடக்கியதாகவும், ஆகையால் அச்சொத்து அந்நால்வருக்கும் பொதுவானதாக அறியமுடிகிறது. இதுகுறித்து மேல்முறையீட்டளாரும், மின்கம்பம் மற்றும் மின்பாதை அமைக்கும் இடமானது ஆட்சேபனை மனு அளித்த திரு.கண்ணையா என்பவருக்கும் திருமதி.மயிலம்மாள் என்பவருக்கும் மட்டும் சொந்தமான தனிநபர் சொத்து கிடையாது எனவும், அந்த இடமானது மனுதாரருக்கும் உரிமையுள்ள பொதுவில் பிரிபடாத பொதுவழி பாதை. அதில் ஆட்சேபனை மனு அளித்தவர்களுக்கு என்ன உரிமை உள்ளதோ அதே உரிமையும் மனுதாரருக்கும் உள்ளது எனவும், மேலும் அது பொதுவழி பாதையே தவிர யாருடைய தனிப்பட்ட நிலமோ அல்லது வீட்டு மனையோ கிடையாது எனவும் கூறியுள்ளார். திரு.கண்ணையா என ஒருவரும் திருமதி.மயிலம்மாள் என மற்றொருவரும் ஆகிய இருவரும் அதே பகுதியை உரிமையுள்ளதாக தெரிவிப்பதிலிருந்து அது யார் ஒருவருக்கும் தனிப்பட்ட உரிமையுள்ளது என கூறஇயலாது, மேலும் மேல்முறையீட்டாளரும் பொதுவழிப்பாதை என தெரிவிப்பதால், ஆட்சேபனைக்குட்பட்ட அப்பகுதி அடங்கல் ஆவணத்தில் பாத்தியப்பட்ட நபர்களுக்கு மட்டுமே உரித்தானதாக அறியமுடிகிறது.

7.6. மேலும் இருதரப்பினரின் வாதங்களின் அடிப்படையில் காணும்போது 6¼ அடி பாதையானது சம்பந்தப்பட்ட 4 நபர்களுக்கு பொதுவானது என்பதை 1990ஆம் வருடம் மார்ச் 31 தேதியிட்ட பதிவுறா ஆவணத்தின் அடிப்படையில் தெரியவருகிறது. இதன்மூலம்

இப்பாதை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மட்டுமே பொதுவானது அன்றி இது பொதுமக்களுக்கான வழித்தடபாதை அல்ல என்பதை அறியமுடிகிறது. ஆகையால் சொந்தஇடத்தில் விஸ்தரிப்புப்பணி மேற்கொள்ள அதன் உரிமையாளர்கள் கேட்கும்பட்சத்தில் அல்லது இசைவு தெரிவிக்கும்பட்சத்தில் மின்இணைப்பு வழங்கஇயலும்.

7.7. மேற்கூறிய காரணங்களினால் திருநெல்வேலி மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் அளித்துள்ள தீர்ப்பு சரி என்றே நான் கருதுவதால் அதில் தலையிடவிரும்பவில்லை.இதன்காரணமாக மேல்முறையீட்டு மனு எண் 9/2022 ஐ தள்ளுபடி செய்து தீர்வுசெய்கிறேன்.

**8. முடிவுரை:**

8.1. பத்தி 7–இல் கண்ட தீர்வுகளின் அடிப்படையில் திருநெல்வேலி மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் அளித்துள்ள தீர்ப்பு சரியென நான் கருதுவதால் இம்மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்கிறேன்.

8.2. இதனால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கவேண்டிய தீர்வு ஏதுமில்லை என தீர்வு செய்கிறேன்.

8.3. **மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 09/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திரு. K. ஆறுமுகம்,
9–170, பிள்ளையார் கோவில் தெரு,
மேலபாவூர், தென்காசி – 627806.

2. உதவி செயற்பொறியாளர் /விநியோகம்/சுரண்டை,
O/o. உதவி செயற்பொறியாளர் /விநியோகம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சுரண்டை – 627 859.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அண்ணா கட்டிடம், தியாகராயநகர் – 627 011.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 4வது தளம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.